மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 82, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

82—

மாவட்டந்தோறும் மத்திய சிறைச்சாலை அமைத்தல்.

*14733—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் மத்திய சிறைச்சாலை ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டஅமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக நலன் கருதி பெரிய மாவட்டங்களைப் பிரிப்பது மட்டும் அன்றி மாவட்ட நீதி மன்றங்களை அந்தந்த மாவட்டங்களில் செயல்படுத்த வேண்டுமென்று செயல்படுத்தி வருகின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் காவல்துறையினருடைய பளுவைக் குறைப்பதற்கும், அரசின் செலவினங்களில் ஒன்றான எரிபொருள் செலவினத்தை மிச்சப் படுத்தவும், நெடுந்தூரப் பயணத்தால் கைதிகள் தப்பிக்க வாய்ப்பு ஏற்படுவதாலும், அதனால் உண்டாகும் செலவினத்தைக் குறைக்கும் பொருட்டு பெயில் எடுப்பதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டும், பொது மக்களின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து சிறைச் சாலைகள் இல்லாத மாவட்டங்களில் சிறைச் சாலைகள் அமைக்க முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன காரணங்களை எல்லாம் ஆய்ந்த பிறகுதான் இந்த முடிவை எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள் இல்லாத மாவட்டங்களில் திறந்த வெளி சிறைச்சாலைகளையாவது அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

1993 டிசம்பர் 30]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்துரு அரசின் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைதிகள் நலனைக் கருத்தில் கொண்டு மத்திய சிறைச்சாலைகளை நவீனமயமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலைகளை நவீனப்படுத்துகின்ற திட்டம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் மற்ற மாநிலங்களில் இப்படி மாவட்டந் தோறும் மத்திய சிறைச்சாலைகள் இருக்கிறதா என்று ஆய்வு செய்யும் அதே சமயத்தில் தமிழ்நாட்டிலும் மாவட்டந்தோறும் மத்திய சிறைச்சாலைகள் கொண்டு வருவதற்கு ஆய்வு செய் வதற்கு முன்பாக காமராஜர் மாவட்டத்தில் மாவட்ட நீதி மன்றம் உள்பட எல்லா நீதிமன்றங்களும் ஸ்ரீவில்லிபுத் தூரில் இருக்கிற காரணத்தால் அங்கே மத்திய சிறைச்சாலை அமைப்பதற்கு அரசு ஆய்வு செய்யுமா என அறிய விரும்பு விரும்புகிறேன், ஐயா.

(பதில் இல்லை).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் எத்தனை மாவட்டங்களில் இது போன்ற மத்திய சிறைச்சாலைகள் இல்லாமல் இருக்கிறது? இப்போது அமைச்சர் அவர்கள் எந்தவிதமான, காரணத்தையும் சொல்லாமல் இல்லை என்ற ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக என்னுடைய வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தி லிருந்து பிரிக்கப்பட்ட திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத் தில் இன்னும் மத்திய சிறைச்சாலை ஏற்படுத்தப்படவில்லை. அப்படி அமைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? என்ன செய்தால், எதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்தால் இந்தத்தமிழகத்தில் கொண்டு வர முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார் களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 8 மத்திய சிறைச்சாலைகள் இருக்கின்றன. 2 பெண்களுக்கான சிறைச்சாலைகள்- ஒன்று மது ரயிலும், இரண்டாவது வேலூரிலும் இருக்கின்றன. 120 சப் ஜெயில்கள், கிளைச் சிறைச்சாலைகள் தமிழகத்தில் இருக்கின்றன. இவைகளில் 18,228 பேருக்கு இட வசதி இருக்கிறது. ஆனால் இதுவரையில் இந்த 18,228 பேர் அங்கே நிரப்பப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவேதான் புதிய மத்திய சிறைச்சாலைகள் கட்டுகிறபோது இந்தக் கணக்கு எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவைக்கு அதிகமாக சிறைச்சாலைகள் தேவையில்லை என்பது அமைச்சருடைய கருத்து. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

முற்பகல் 10-15

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கைதிகளை வைக்க, தனியாக சிறைச்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற சிறைச்சாலைகளில்தான் அரசியல் கைதிகளும் வைக்கப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே, மத்திய சிறைச்சாலையிலே ஆண் கைதிகளையெல்லாம் கொண்டுபோய் அடைத்து விடுகிறார்கள். எங்களை மாதிரி பெண்களை கைது செய்யும்போது சப் ஜெயிலில் கொண்டு போய் வைக்கிறார்கள். இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்கிற வகையிலே மத்திய சிறைச்சாலையிலே பெண் கைதிகளுக்கும் வசதிகள் ஏற்படுத்தித் தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் தண்டிக்கப்பட்டால் அவர்கள் வேலூர் சிறைச்சாலை அல்லது மதுரை சிறைச்சாலைக்கு, அவைகள் நல்ல வசதியாகக் கட்டப்பட்டிருப்பதால், அங்கே அனுப்பி வைக்கப்படுவார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி, எதிர்காலத்தில் அவருக்கு அந்தச் சங்கடம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.